செ.வெ.எண்– 95 நாள்–24.09.2026

# பத்திரிக்கை செய்தி

-----

கோயம்புத்தூர் மத்தியசிறை கட்டுப்பாட்டிலுள்ள மாவட்ட சிறை / கிளைச் சிறைகளில் காலியாக உள்ள 06 தூய்மைப் பணியாளர் பணியிடத்தினை நிரப்பிட தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இப்பணியிடம் இன சுழற்சியில் நிரப்பப்பட உள்ளது. இப்பணியிடத்திற்கு கீழ்க்கண்ட விபரப்படி விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். தகுதியுள்ள நபர்கள் சம்மந்தப்பட்ட சான்றிதழ்களின் ஜெராக்ஸ் நகல்களுடன் சிறைகண்காணிப்பாளர், மத்தியசிறை, கோயம்புத்தூர்–18 என்ற முகவரியிட்டு 05.10.2026 அன்று மாலை 05.45 மணிக்குள் கோயம்புத்தூர் மத்தியசிறையில் கிடைக்கும் வண்ணம் அஞ்சல் மூலம் விண்ணப்பங்களை அனுப்பி வைத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேற்படி தேதிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. மேற்கண்ட பணியிடத்தினை நிரப்புவதற்கான நேர்முகத் தேர்வின் தேதி மற்றும் நேர விபரம் தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மட்டும் அஞ்சல் மூலம் பின்னர் தெரிவிக்கப்படும்.

| வ.எண் | காலியாக உள்ள சிறை | காலிப்பணியிடம் | வகுப்பு | வயது வரம்பு |
|---|---|---|---|---|
| 1 | கிளைச்சிறை, பொள்ளாச்சி | 01 | SC | 35 |
| 2 | கிளைச்சிறை பல்லடம் | 01 | SC | 35 |
| 3 | கிளைச்சிறை, தாராபுரம் | 01 | BC (OBCM) | 32 |
| 4 | கிளைச்சிறை, உடுமலைப்பேட்டை | 01 | BCM | 32 |
| 5 | கிளைச்சிறை, பெருந்துறை | 01 | MBC(DNC) | 32 |
| 6 | கிளைச்சிறை, உதகை | 01 | GT | 30 |

**வெளியீடு – செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், ஈரோடு மாவட்டம்.**